# மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், உத்தமபாளையம்.

**முன்னிலை: திரு. C. ராஜசேகர், B.A., B.L.,**
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
உத்தமபாளையம்.

2025-ம் ஆண்டு ஜுன் மாதம் 13-ம் நாள் வெள்ளிக் கிழமை

**I.A.No.7/2025 in O.S.No.178/2019**

| | |
|---|---|
| ஆதி அண்ணாமலையார் அவர்களது புனித சிலை சுருளி தீர்த்தம் வட்ட கோவில் (எ) சுருளி ஆண்டவர் கோவில் (எ) ஸ்ரீ ஆதி அண்ணாமலையார் கோவில், அதன் பூசாரி முருகன் மூலம் | :: மனுதாரர் / வாதி |

**/எதிர்/**

| | |
|---|---|
| 1. மாவட்ட ஆட்சியர், தேனி.<br>2. வட்டாட்சியர், உத்தமபாளையம்.<br>3. சிறப்பு அலுவலர், சுருளிபட்டி பஞ்சாயத்து யூனியன், வட்டார வளர்ச்சி அலுவலர், கம்பம், தேனி மாவட்டம்.<br>4. பழனிவேலு. | :: எதிர்மனுதாரர்கள் /பிரதிவாதிகள் |

------

இம்மனுவானது 04.06.2025-ம் தேதி என் முன்பாக இறுதியான விசாரணைக்கு வந்தபோது மனுதாரர் / வாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு. R. ராஜமோகன், அவர்கள் ஆஜராகியும், 1 முதல் 3 எதிர்மனுதார்கள் தரப்பில் கற்றறிந்த அரசு வழக்கறிஞர் திரு.K.போதுராஜா அவர்கள் ஆஜராகியும், 4-ம் எதிர்மனுதார் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.M.ஷாகுல்ஹமீது, அவர்கள் ஆஜராகியும், இரு தரப்பு வாதங்கள் கேட்கப்பட்டும் ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டும் இதுநாள் வரை என் கவனமான பரிசீலனையில் இருந்து வந்தும் இன்று இந்நீதிமன்றம் கீழ்கண்டவாறு வழங்கும்

RAJASEKAR C
Digitally signed by RAJASEKAR C
Date: 2025.06.13 09:51:57 +0300

## <u>உத்தரவு</u>

சுருளிபட்டி கிராம பஞ்சாயத்தின் செயல் அலுவலர் மற்றும் நாராயணத்தேவன்பட்டி கிராமத்தின் கிராம நிர்வாக அலுவலர் ஆகியோர்களுக்கு சாட்சி அழைப்பாணை அனுப்பி, மேற்படி நபர்களை அசல் வழக்கில் சாட்சியாக விசாரணை செய்ய தகுந்த உத்தரவிடவேண்டி உ.வி.மு.ச. கட்டளை 16 விதி 1–ன் கீழ் மனுத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2) **<u>மனுதாரர் / வாதி தரப்பு மனு உரையின் சுருக்கம்:</u>**

மனுதாரர் வழக்கு கோவிலில் பூசாரியாக இருந்து இவ்வழக்கினை நடத்தி வருவதாகவும், வழக்குச் சொத்தானது நாராயணத்தேவன்பட்டி கிராமம், சர்வே எண்.2048–ல் அமைந்துள்ளது என்றும், அதனை சுருளி தீர்த்தம் சுருளி நதி அரசு புறம்போக்கு என வருவாய் துறையால் வகைப்பாடு செய்யப்பட்டிருப்பதாகவும், வழக்குச் சொத்தான சுருளி தீர்த்தம் வட்ட கோவில் (எ) சுருளி ஆண்டவர் கோவில் (எ) ஸ்ரீ ஆதி அண்ணாமலையார் கோவில் என்பது சர்வே எண்.2048–ல் 0.04.0 ஏர்ஸ் என்ற அளவில் அமைந்துள்ளதாகவும், இக்கோவில் சுமார் 1500 ஆண்டுகளுக்கு முன்பிருந்தே இருந்து வருவதாகவும், அசல் வழக்கில் வழக்குச் சொத்திற்கு மேற்கே 4–ம் எதிர்மனுதாரர் / 4–ம் பிரதிவாதிக்குச் சொந்தமான சர்வே எண்.2027 என்ற நிலம் அமைந்துள்ளது என்பதை ஆட்சேபிப்பதாகவும், 4–ம் எதிர்மனுதாரர் அவரது நிலத்தினை வணிக பயன்பாட்டிற்கு பயன்படுத்தி தங்கும்விடுதி அமைத்து அதற்கு வழிப்பாதையாக வழக்குச் சொத்தினை அமைக்க முயற்சித்து வருகிறார் என்றும், மேலும், வழக்குச் சொத்து ஆற்றுப் புறம்போக்கில் அமைந்துள்ளது என வருவாய்துறையில் பதிவாகியிருப்பது தவறானது என்றும், இக்குறிப்பிட்ட விபரங்களை நிரூபிப்பதற்கு **சுருளிபட்டி கிராம பஞ்சாயத்தின் செயல் அலுவலர் மற்றும் நாராயணத்தேவன்பட்டி கிராமத்தின் கிராம நிர்வாக அலுவலர்** ஆகியோர்களை நீதிமன்ற சாட்சியாக விசாரிக்க வேண்டியிருப்பதாகவும், மேற்படி சாட்சிகளை நீதிமன்றத்திற்கு சாட்சிகளாக அழைக்க உத்தரவிடும்பட்சத்தில் இவ்வழக்கில் உள்ள அனைத்து

RAJASEKAR C
Digitally signed by RAJASEKAR C
Date: 2025.06.13 09:52:07 +0300

பிரச்சனைகளையும் தீர்மானிக்க இயலும் என்றும், எனவே, மேற்படி நபர்கள் இருவரையும் அசல் வழக்கில் நீதிமன்ற சாட்சிகளாக அழைக்க உத்தரவிடுமாறு வேண்டப்பட்டுள்ளது.

3) <u>**1 முதல் 3 எதிர்மனுதாரர்கள் தரப்பு எதிர்உரையின் சுருக்கம்**</u>.

சுருளிபட்டி என்பது பஞ்சாயத்து அல்ல என்றும், அது ஒரு ஊராட்சி ஒன்றிய பகுதி என்றும், மேற்படி சுருளிபட்டிக்கு செயல் அலுவலர் என்ற பதவியே இல்லை என்றும், கம்பம் ஊராட்சி ஒன்றிய வட்டார வளர்ச்சி அலுவலரே சுருளிபட்டி ஊராட்சிக்கு தனி அலுவலராக வருவார் என்றும், அவர் இவ்வழக்கில் 3–ம் பிரதிவாதியாக ஏற்கனவே இருந்து வருகிறார் என்றும், மேலும், கிராம நிர்வாக அலுவலரை நீதிமன்ற சாட்சியாக விசாரிக்க வேண்டியும் தாக்கல் செய்துள்ள இம்மனு நிலைக்கத்தக்கதல்ல என்றும், எனவே, இம்மனுவினை தள்ளுபடி செய்யுமாறு வேண்டப்பட்டுள்ளது.

4) <u>**4–ம் எதிர்மனுதாரர் தரப்பு எதிர்உரையின் சுருக்கம்**</u>.

மனுதாரர் தரப்பு மனு உரைசங்கதிகள் தவறானவை என மறுத்தும், அசல் வழக்கில் சர்வே எண்.2047 சொத்து 4–ம் பிரதிவாதிக்குரியதா ? என்பதைப் பொறுத்து தீர்மானிக்க வேண்டிய அவசியமே இங்கு இல்லை என்றும், எனவே, மேற்படி சங்கதி குறித்து நிரூபிப்பதற்காக சாட்சிகளை விசாரிக்க வேண்டும் என அனுமதி கேட்டு தாக்கல் செய்துள்ள இம்மனு நிலைக்கத்தக்கதல்ல என்றும், சுருளிபட்டி கிராம பஞ்சாயத்து அல்ல என்றும், அதற்கு செயல் அலுவலர் எனற் பதவியே கிடையாது என்றும், எனவே, இம்மனுவினை தள்ளுபடி செய்யுமாறு வேண்டப்பட்டுள்ளது.

5) இம்மனுவில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை என்னவென்றால் மனுதாரர் தாக்கல் செய்துள்ள மனு அனுமதிக்கத்தக்கதா? என்பதாகும்.

6) இரு தரப்பிலும் வாய்மொழி சாட்சியம் மற்றும் சான்றாவணங்கள் முன்னிலைப்படுத்தப்படவில்லை.

RAJASEKAR C
Digitally signed by RAJASEKAR C
Date: 2025.06.13 09:52:14 +0300

7) <u>பிரச்னைக்கான விவாதம் மற்றும் தீர்வு:</u>

07–01) மனுதாரர் தரப்பு வழக்குரையில், வழக்கு கோவிலானது சர்வே எண்.2048–ல் அமைந்துள்ளது என்றும், சுமார் 1500 ஆண்டுகளுக்கு முன்பிருந்தே இருந்து வரும் மேற்படி கோவிலை, வருவாய்துறையினர் ஆற்றுப் புறம்போக்கு நிலமாக வகைப்பாடு செய்துள்ளது தவறானது என்றும், 4–ம் எதிர்மனுதாரர் / 4–ம் பிரதிவாதி பெயரில் உள்ள சர்வே எண்.2027 சொத்து ஆற்றுப் புறம்போக்கு வகையைச் சார்ந்தது என்றும், அதனை வணிக நோக்கத்திற்காக 4–ம் பிரதிவாதி மாற்ற முயற்சித்து தங்கும் விடுதி அமைக்க முயற்சிப்பதாகவும், தற்போது வழக்குச் சொத்தினை ஆக்கிரமித்து பாதை ஏற்படுத்திக்கொள்ள முயற்சித்து வருவதாகவும், மேற்படி விபரங்களை நிரூபிக்க சுருளிபட்டி கிராம பஞ்சாயத்தின் செயல் அலுவலர் மற்றும் நாராயணத்தேவன்பட்டி கிராமத்தின் கிராம நிர்வாக அலுவலர் ஆகியோரை நீதிமன்ற சாட்சியாக அனுமதித்து உத்தரவிடுமாறு வேண்டப்பட்டுள்ளது.

07–02) இதுகுறித்து பரிசீலிக்கையில், முதற்கண் இம்மனுவில் சாட்சியாக அழைக்க கோரியுள்ள முதலாவது நபரின் பொறுப்பு குறித்து எதிர்மனுதாரர்களால் முன்னெடுக்கப்பட்டிருக்கும் எதிர்வாதமானது, சுருளிபட்டி கிராமம் பஞ்சாயத்து அல்ல என்றும், அதற்கு செயல் அலுவலர் என்ற பதவியே இல்லை என்றும், அது கம்பம் ஊராட்சி ஒன்றியத்திற்கு கட்டுப்பட்ட ஒரு பகுதி என்றும், அதற்கு தனி அலுவலராக கம்பம் ஊராட்சி ஒன்றிய வட்டார வளர்ச்சி அலுவலரே வருவார் என்பதாகும். இக்குறிப்பிட்ட பொருண்மை குறித்து வாதத்தின்போதும் ஆட்சேபனை எதுவும் தெரிவிக்கவில்லை.

07–03) மேலும், இம்மனுவில் சாட்சியாக விசாரிக்க கோரியுள்ள சுருளிபட்டி கிராம பஞ்சாயத்தின் செயல் அலுவலர் என்ற பதவியினைப் பொறுத்து யாதொரு திருத்தப்பாடு மனுவும் தாக்கல் செய்து திருத்தம் செய்யவும் மனுதாரர் தரப்பில் முயற்சிக்கவில்லை. எனவே, சுருளிபட்டிக்கு என்று பஞ்சாயத்தே இல்லாத நிலையில், அதில் செயல் அலுவலர் என்ற பதவியும் இல்லாத நிலையில், மேற்படி

RAJASEKAR C
Digitally signed by RAJASEKAR C
Date: 2025.06.13 09:52:20 +0300

தவறுகை குறித்து மனுதாரர் தரப்பில் எந்த ஒரு ஆட்சேபனையும் செய்யாத நிலையில், மேலும் இம்மனுவினை திருத்தம் செய்யவும் முயற்சிக்காத நிலையில், உண்மையில், இம்மனுவில் சாட்சியாக விசாரிக்க அழைக்கக்கோரி குறிப்பிடப்பட்டுள்ள அலுவலர் பணி நிலையில், அதுபோன்ற ஒரு பொறுப்போ, அலுவலரோ இல்லாத நிலையில், அவ்வாறு இம்மனுவில் முதலாவதாக குறிப்பிடப்பட்டுள்ள நபரை சாட்சியாக விசாரிக்க அனுமதி கோர இயலாது என்பதை இந்நீதிமன்றம் கவனத்தில் கொள்கிறது.

07–04) இதனையடுத்து இரண்டாவது ஆட்சேபனையாக எதிர்மனுதாரர்கள் தரப்பில் முன்வைக்கப்பட்டுள்ள ஆட்சேபனை யாதெனில், அசல் வழக்கானது வழக்குச் சொத்து அமைந்துள்ள சர்வே எண்.2048 தொடர்புடையது என்றும், ஆனால், மனுதாரர் / வாதி சர்வே எண்.2027–ல் அமைந்துள்ள சொத்தானது 4–ம் பிரதிவாதிக்கு பாத்தியப்பட்டதா ? இல்லையா ? என்பதைப் பொறுத்து இம்மனுவின் வாயிலாக நிரூபிக்க முயற்சிப்பதாகவும், சர்வே எண்.2027 சொத்தின் உரிமை குறித்து இந்த அசல் வழக்கில் தீர்மானிக்க வேண்டிய அவசியமே இல்லை என்பதால் இம்மனுவில் தெரிவித்துள்ள காரணம் ஏற்புடையதல்ல என்றும், அதன்படி இம்மனுவினை தள்ளுபடி செய்யுமாறு வேண்டப்பட்டுள்ளது.

07–05) இதுகுறித்து பரிசீலிக்கையில் அசல் வழக்கின் பத்தி 8–ஐத்தான் இம்மனுவில் பத்தி 3–ஆக மாறுதல் செய்து குறிப்பிடப்பட்டுள்ளது. மேற்படி அசல் வழக்கின் பத்தி 8 மற்றும் இம்மனுவின் பத்தி 3 ஆகியவற்றை பரிசீலிக்கையில், 4–ம் எதிர்மனுதாரருக்குச் சொந்தமான சர்வே எண்.2027 சொத்தானது UDR–க்கு முன்பு சுருளி ஆறு என வகைப்படுத்தப்பட்டிருந்ததாக கூறியுள்ளதை அறிய முடிகிறது.

07–06) இதுகுறித்து 4–ம் எதிர்மனுதாரர் தரப்பு எதிர்உரையில் தெரிவித்திருப்பதுபோல் அசல் வழக்கானது சர்வே எண்.2048 தொடர்புடையது என்ற நிலையில், சர்வே எண்.2027–ல் 4–ம் எதிர்மனுதாரருக்கு உரிமை உள்ளதா ? இல்லையா ? என்பதை பொறுத்தும், அச்சொத்து தனி நபர் சொத்தா ?

RAJASEKAR C
Digitally signed by RAJASEKAR C
Date: 2025.06.13 09:52:26 +0300

அல்லது புறம்போக்கு வகையைச் சார்ந்ததா? என்பதைப் பொறுத்து இவ்வழக்கில் தீர்மானிக்கவேண்டிய அவசியமில்லை. மேற்படி சர்வே எண்.2027 குறித்து எந்த தீர்மானமும் எட்ட வேண்டிய அவசியமும் இவ்வழக்கில் இல்லை என்ற நிலையில், இவ்வழக்கின் பரிகாரத்திற்கு தொடர்பு இல்லாத வகையில் சர்வே எண்.2027 சொத்தினைப் பொறுத்து ஆட்சேபித்து இம்மனுவில் தெரிவித்திருப்பது ஏற்புடையதாக தோன்றவில்லை.

07–07) மேலும், இம்மனுவில் நாராயணத்தேவன்பட்டி கிராமத்தின் கிராம நிர்வாக அலுவலரை சாட்சியாக விசாரிக்க கோருவதற்கு தெரிவித்துள்ள காரணமானது வழக்குச் சொத்தினை தவறாக ஆற்றுப் புறம்போக்கு என வகைப்பாடு செய்யப்பட்டுள்ளது குறித்து நிரூபிப்பதற்காக என தெரிவிக்கப்பட்டுள்ளது. ஆனால், மேற்படி சாட்சியை எந்த ஆவணங்கள் குறித்து விசாரிக்க வேண்டியுள்ளது என்பதைப் பொறுத்து இம்மனுவில் தெரிவிக்கப்படவேயில்லை. அதன்படி வருவாய்துறை அலுவலரான கிராம நிர்வாக அலுவலரை சாட்சியாக விசாரிக்க வேண்டும் எனில் அவரது பாதுகாப்பில் உள்ள ஆவணங்கள் தொடர்புடையதாக மட்டுமே இருக்க இயலும். இந்நிலையில், அவரது பாதுகாவலில் உள்ள ஆவணங்களில் எந்தெந்த ஆவணங்களை மேற்படி சாட்சி எடுத்து வந்து சாட்சியமளிக்க வேண்டும் என்பதைப் பொறுத்து இம்மனுவில் எந்த விபரமும் தெரிவிக்கப்படவில்லை. மேற்படி மனுவில் குறிப்பிட்டுள்ள சாட்சிகள் கட்டாயம் அரசு ஆவணங்களின் அடிப்படையில் மட்டுமே சாட்சியமளிக்க இயலும் என்ற நிலையில், மேற்படி சாட்சிகள் எந்தெந்த ஆவணங்களை சமர்ப்பித்து சாட்சியமளிக்க வேண்டும் என குறிப்பாக இம்மனுவில் தெரிவிக்கப்படாத காரணத்தினால் இம்மனுவில் கோரப்பட்டுள்ள பரிகாரம் தெளிவற்றதாக உள்ளது என இந்நீதிமன்றம் கருதுகிறது.

07–08) இதனையடுத்து, முதலாவது சாட்சியாக குறிப்பிடப்பட்டுள்ள சுருளிபட்டி பஞ்சாயத்தின் செயல் அலுவலர் என்ற பொறுப்பே உண்மையில் இல்லை என்ற நிலையில், சுருளிபட்டி பஞ்சாயத்திற்கு கம்பம் ஒன்றிய வட்டார

RAJASEKAR C
Digitally signed by RAJASEKAR C
Date: 2025.06.13 09:52:33 +0300

வளர்ச்சி அலுவலராக பொறுப்பு கொண்ட 3–ம் பிரதிவாதியே பொறுப்பாளராக உள்ளார் என தெரிவித்துள்ள நிலையில், அவர் ஏற்கனவே 3–ம் பிரதிவாதியாக உள்ளதை அறியமுடிகிறது. இதனையடுத்து கிராம நிர்வாக அலுவலரின் உயர் அதிகாரியான தாசில்தார், மாவட்ட ஆட்சியர் ஆகியோர் 1, 2 பிரதிவாதிகளாகச் சேர்க்கப்பட்டுள்ளனர். எனவே, இவ்வழக்கில் பிரதிவாதிகளாக உள்ள நபர்களை அவர்களுக்கு எதிர்நிலையில் இருந்து வழக்காடும் வாதி சாட்சியாக விசாரிக்க வேண்டும் என கோரியிருப்பது முரணாக உள்ளது.

07–09) இதுகுறித்து எதிர்மனுதாரர்கள் தரப்பில் வாதத்தின்போது மனுவில் கண்ட சாட்சிகள் அரசு அலுவலர்கள் என்ற நிலையில், அரசு ஆவணங்களைப் பொறுத்து சாட்சியமளிக்க கடமைப்பட்டுள்ளனர் என்றாலும் கூட, 1 முதல் 3 பிரதிவாதிகள் தரப்பு வாததத்தின்போது தங்கள் தரப்பில் சாட்சியாக விசாரிக்க கோரியிருப்பது வழக்கை திசை திருப்பி கால தாமதத்திற்கு உட்படுத்தும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும், இவ்வழக்கில் பிரதிவாதிகள் தங்கள் தரப்பில் தொடர்ச்சியாக எதிர்வாதங்களை முன்னிறுத்தி எதிர் வழக்காடி வரும் நிலையில், வாதி தரப்பு சாட்சி விசாரணை முடிவுறுவதற்கு முன்பே பிரதிவாதிகளை வாதி தரப்பு சாட்சிகளாக விசாரிக்க கோருவது ஏற்புடையதாக இல்லை என இந்நீதிமன்றம் கருதுகிறது. மேலும், பிரதிவாதிகள் கைவசம் ஏதேனும் அரசு ஆவணங்கள் இருந்து அதனை நீதிமன்றத்தில் சமர்ப்பிக்க மனுதாரர் தரப்பில் விரும்பும் பட்சத்தில் அத்தகைய ஆவணம் என்ன என்பதையும் அத்தகைய ஆவணங்களை சான்றிட்ட நகல்களாக பெற்று தாக்கல் செய்வதில் என்ன சிக்கல் உள்ளது என்பதைப் பொறுத்தும், அத்தகைய ஆவணங்களை சான்றிட்ட நகல்களாக பெறுவதற்கு என்ன முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டது என்பதைப் பொறுத்தும் இம்மனுவில் தெரிவிக்கப்படவில்லை.

07–10) மேலும், ஏற்கனவே விவாதித்தவாறு வாதி எந்தெந்த ஆவணங்களின் அடிப்படையில் என்ன விபரத்தை நிரூபிப்பதற்காக இம்மனுவினை தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்று இம்மனுவில் குறிப்பாக

RAJASEKAR C
Digitally signed by RAJASEKAR C
Date: 2025.06.13 09:52:39 +0300

தெரிவிக்காத நிலையில், அசல் வழக்கின் பிரதிவாதிகளை தெளிவில்லாத கோரிக்கையின் அடிப்படையில் பிரதிவாதிகள் தரப்பு சாட்சி விசாரணை தொடங்குவதற்கு முன்பு வாதியால் சாட்சியாக விசாரணைக்கு அழைக்க உத்தரவிடக்கோருவது ஏற்புடையதல்ல என இந்நீதிமன்றம் கருதுகிறது. மேலும், கட்டளை 16 விதி 1–ன் கீழ் தாக்கல் செய்யப்பட்டுள்ள இம்மனுவில் குறிப்பிட்டுள்ள சாட்சிகளை தங்கள் தரப்பு சாட்சிகளாக விசாரிக்க அனுமதி கோராமல் நீதிமன்ற சாட்சியாக விசாரிக்க அனுமதி கோரியிருப்பது பொருத்தமானதாக இல்லை.

07–11) மேலும், வாதி இம்மனுவை தாக்கல் செய்துள்ள நிலையில், மேற்படி சாட்சிகளை விசாரிப்பது தங்கள் தரப்பு வழக்கை நிரூபிக்க எவ்வகையில் உதவும் என்றும், தனது தரப்பு சாட்சியாக விசாரிக்க கோருவதை தவிர்த்து நீதிமன்ற சாட்சியாக விசாரிக்க கோரி தாக்கல் செய்துள்ள இம்மனு ஏற்புடையதாக தோன்றவில்லை.

07–12) வாதி தரப்பு வழக்குரை சங்கதிகளை வாதியே உரிய சாட்சிய சான்றாவணங்கள் வாயிலாக நிரூபிக்க கடமைப்பட்டுள்ள நிலையில், வழக்குச் சொத்து தொடர்புடைய பொருண்மைகள் அரசு அலுவலரால் பராமரிக்கப்படும் ஆவணங்கள் வாயிலாக மட்டுமே நிரூபிக்க இயலும் என்ற நிலையில், அவர்கள் பிரதிவாதிகளாக இவ்வழக்கில் இருந்தாலும் அவர்கள் அரசு அலுவலர்கள் என்ற நிலையில் சாட்சியாக விசாரிக்க அனுமதித்து உத்தரவிட இயலும். ஆனால், மனுதாரர் தரப்பில் இம்மனுவின் சாட்சிகளை நீதிமன்ற சாட்சிகளாக விசாரிக்க கோரியுள்ள நிலையில், எந்தெந்த ஆவணங்கள் குறித்து மேற்படி சாட்சிகள் நீதிமன்றத்தில் சமர்ப்பித்து சாட்சியமளிக்க வேண்டும் என்பது குறித்து எந்த விளக்கமும் இல்லாத நிலையில், மனுஉரை சங்கதிகள் மற்றும் பரிகாரங்கள் ஏற்புடையது அல்ல என இந்நீதிமன்றம் கருதுகிறது. மேற்கண்ட விவாதத்தின் அடிப்படையில் இம்மனுவினை தள்ளுபடி செய்திட இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

RAJASEKAR C
Digitally signed by RAJASEKAR C
Date: 2025.06.13 09:52:46 +0300

**8)** முடிவாக,

| | |
|---|---|
| 1 | இம்மனுவினை தள்ளுபடி செய்து உத்தரவிடப்படுகிறது. |
| 2 | செலவுத் தொகை இல்லை. |

இந்த உத்தரவானது முழுவதும் என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணிணியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு என்னால் பிழை திருத்தம் செய்யப்பட்டு இன்று 13.06.2025–ம் தேதியில் அவையறிய பகரப்பட்டது.

RAJASEKAR C Digitally signed by RAJASEKAR C Date: 2025.06.13 09:53:01 +0300

**மாவட்ட உரிமையியல் நீதிபதி,**
**உத்தமபாளையம்.**

**மனுதாரர் தரப்பு சாட்சி, சான்றாவணங்கள் - இல்லை.**
**எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சி, சான்றாவணங்கள் - இல்லை.**

RAJASEKAR C Digitally signed by RAJASEKAR C Date: 2025.06.13 09:52:55 +0300

**மாவட்ட உரிமையியல் நீதிபதி,**
**உத்தமபாளையம்.**

I.A.7/2025

in

O.S. 178/2019

FAIR / DRAFT ORDER

Date : 13.06.2025

## மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், உத்தமபாளையம்.

**முன்னிலை: திரு. C. ராஜசேகர், B.A., B.L.,**
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
உத்தமபாளையம்.

2025-ம் ஆண்டு ஜுன் மாதம் 13-ம் நாள் வெள்ளிக் கிழமை

**I.A.No.7/2025 in O.S.No.178/2019**

| | |
|---|---|
| 1. | ஆதி அண்ணாமலையார் அவர்களது புனித சிலை சுருளி தீர்த்தம் வட்ட கோவில் (எ) சுருளி ஆண்டவர் கோவில் என்ற ஸ்ரீ ஆதி அண்ணாமலையார் கோவில் சார்பாக அதன் பூசாரி தேனி மாவட்டம், உத்தமபாளையம் தாலுகா, ராயப்பன்பட்டி, தொலைபேசி அலுவலகம் எதிர்தெரு, கதவு எண்.301/W-1-ல் குடியிருக்கும் கோபால் அவர்களது மகன் இந்து சுமார் வயது 50 உள்ள முருகன் |

.... மனுதாரர் /வாதி

| | |
|---|---|
| 1 | மாவட்ட ஆட்சியர் அவர்கள், தேனி. |
| 2 | வட்டாட்சியர் அவர்கள், உத்தமபாளையம், தேனி மாவட்டம். |
| 3 | சிறப்பு அலுவலர், சுருளிபட்டி பஞ்சாயத்து யூனியன், வட்டார வளர்ச்சி அலுவலர், தேனி மாவட்டம். |
| 4 | தேனி மாவட்டம், உத்தமபாளையம் தாலுகா, கம்பம், No.60/28, கிராமசாவடி தெரு என்ற முகவரியில் வசிக்கும் குருசாமி மகன் இந்து சுமார் 66 வயதுள்ள G.பழனிவேலு. |

... எதிர்மனுதாரர்கள் / பிரதிவாதிகள்

சுருளிபட்டி கிராம பஞ்சாயத்தின் செயல் அலுவலர் மற்றும் நாராயணத்தேவன்பட்டி கிராமத்தின் கிராம நிர்வாக அலுவலர் ஆகியோர்களுக்கு சாட்சி அழைப்பாணை அனுப்பி, மேற்படி நபர்களை அசல் வழக்கில் சாட்சியாக விசாரணை செய்ய தகுந்த உத்தரவிடவேண்டி உ.வி.மு.ச. கட்டளை 16 விதி 1-ன் கீழ் மனுத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

| | |
|---|---|
| மனு தாக்கல் செய்யப்பட்ட நாள் | 24.02.2025 |
| நீதிமன்ற கட்டணம் | ரூ.20/- செலுத்தப்பட்டது. |

RAJASEKAR C

Digitally signed by RAJASEKAR C
Date: 2025.06.13 09:53:08 +0300

இம்மனுவானது 04.06.2025–ம் தேதி என் முன்பாக இறுதியான விசாரணைக்கு வந்தபோது மனுதாரர் / வாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு. R. ராஜமோகன், அவர்கள் ஆஜராகியும், 1 முதல் 3 எதிர்மனுதார்கள் தரப்பில் கற்றறிந்த அரசு வழக்கறிஞர் திரு.K.போதுராஜா அவர்கள் ஆஜராகியும், 4–ம் எதிர்மனுதார் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.M.ஷாகுல்ஹமீது, அவர்கள் ஆஜராகியும், இரு தரப்பு வாதங்கள் கேட்கப்பட்டும் ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டும் இதுநாள் வரை என் கவனமான பரிசீலனையில் இருந்து வந்தும் இன்று இந்நீதிமன்றம் கீழ்கண்டவாறு வழங்கும்

**<u>நிறைவேற்றாணை</u>**

| | |
|---|---|
| 1 | இம்மனுவினை தள்ளுபடி செய்து உத்தரவிடப்படுகிறது. |
| 2 | செலவுத் தொகை இல்லை. |

2025–ம் வருடம் ஜூன் மாதம் 13–ம் நாள் எனது கையொப்பமும் இந்நீதிமன்ற முத்திரையும் இடப்பட்டது.

RAJASEKAR C

Digitally signed by RAJASEKAR C
Date: 2025.06.13 09:53:16 +0300

***மாவட்ட உரிமையியல் நீதிபதி,***
***உத்தமபாளையம்.***

I.A.7/2025
in
O.S. 178/2019
EX ORDER
Date : 13.06.2025